1st April 1958]

SRI M. JAGANNATHAN : Sir, generally the I.C.S. officers are, so far as they are concerned, efficient officers. Why is it that three of these officers were allowed to retire prematurely and why were not they requested and pressed to remain so that they could render useful service to our State?

THE HON. SRI C. SUBRAMANIAM : We want only willing officers. No use requesting persons who want to retire. Nothing will be gained by requesting them to continue against their wishes.

SRI A. A. RASHEED : Sir, were these officers paid any compensation for the premature retirement?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes; as per rules they are entitled to pension afterwards.

SRI T. S. RAMASWAMY PILLAI : இந்த அதிகாரிகள் ஓய்வு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சொன்னதற்குப் பின்னர் வேறு ஏதாவது எழுதியிருக்கிறார்களா ? உடல் நிலை தவிர, இதர ஆபீஸர்கள் இதர காரணங்களைக் கூறியிருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் எம். வி. சுப்பிரமணியம் அவர்களைப் பற்றி உடல் நிலை காரணம் என்று கூறினேன். மற்றவர்கள் வேறு ஒன்றும் கூற வில்லை.

SRI K. VINAYAKAM : Sir, as amongst the three cases, was there any instance where their opinions were found to be contradictory with the opinions held by the Government and that culminated in their retirement, by their giving the cause as old-age, inability to serve the State, etc.?

THE HON. SRI C. SUBRAMANIAM : Not so, as far as I know. Because, I have not known their views nor do I know whether they hold contrary views. No case I have come across wherein any serious difference of opinion existed between the officers and the Government. The officers are expected to carry out the policy of the Government.

STARRED QUESTIONS.

Second Language Test

* 491 *Q.*—SRI N. K. PALANISAMI AND SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Will the Hon. the Chief Minister be pleased to state with reference to the answers given to questions Nos. 63 and 64 on the 2nd November 1957—

(*a*) whether the Government have reached any decision in regard to the Second Language Tests;

(*b*) if not, when the decision is likely to be taken;

(*c*) whether there is any proposal to stop the tests in Telugu, Malayalam and Kanarese at least till the whole question is settled; and

(*d*) whether the Government are aware of the fact that the Language Tests have been abolished for Government servants in Andhra, Kerala and Mysore?

[1st April 1958

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) Orders have been issued abolishing the Language Tests in languages other than Tamil.

(*c*) Does not arise.

(*d*) The Government have no information about the abolition of the Language Tests for Government servants in those States.

All-India Radio

* 492 *Q.*—SRI A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government are giving any advice in regard to the educational programmes of the All-India Radio, Tiruchirappalli and Madras;

(*b*) if so, whether the Government have any information as to how their advice is given effect to; and

(*c*) whether broadcasts on Basic Education are included in the educational programmes of the All-India Radio?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

(*c*) Yes.

SRI A. VEDARATHNAM : இந்த கல்வி ஒலிபரப்புவிஷயத்தில் வானொலி நிலையத்தில ஒரு ஆலோசனைக் கமிட்டி இருக்கிறதா ? அதிலே நம்முடைய கல்வி இலாகா அதிகாரிகள் பங்கு எடுத்துக்கொள்கிறார்களா? அப்படி இருந்தால் ஆதாரக் கல்வியைப் பரப்புகின்ற விஷயமாக அவர்கள் மாறான அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கல்வி இலாகாவிலிருந்து ஒரு பிரதிநிதி அந்த கமிட்டியில் அங்கம் வகிக்கிறார்கள். அவர் எந்தவிதமான அபிப்பிராயத்தைச் சொல்லியிருக்கிறார் என்று என்னிடம் தகவல் இல்லை.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : சில காலமாக "வானொலி" என்று சொல்வதை விட்டு "ஆகாச வாணி" என்று சொல்கிறார்கள். இலங்கையில் கூட "வானொலி " என்று தான் சொல்லுகிறார்கள். சர்க்கார் அதைப் பற்றி ஏதாவது உத்திரவு பிறப்பித்தார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் அவர்கள் "வானொலி" என்று சொல்வதை நாங்கள் எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஆனால் அதை ஆல்-இண்டியா ரேடியோ எடுத்துக்கொண்டு அவர்கள் உபயோகிக்க இந்தக் கேள்வியைப் பார்லிமெண்டில் போட வேண்டும்.

SRI A. V. P. ASAITHAMBI : " ஆகாசவாணி " என்ற வார்த்தைக்கு பதிலாக "வானொலி" என்ற வார்த்தையை உபயோகிக்க வேண்டுமென்று மத்திய சர்க்காருக்கு இந்த சர்க்கார் எழுதுமா ?

MR. SPEAKER : The hon. Member is going away from the main question.

1st April 1958]

SRI A. VEDARATHNAM : ஆதாரக் கல்வியில் இணைப்பு போதனை (காரலேடட் டீசிங்) மிக முக்கியமான அம்சம். அது போதிப்பதும் கொஞ்சம் கடினம். சிறந்த நிபுணர்களை கொண்டு கல்வி ஒலிபரப்பு சமயத்தில் இணைப்பு போதனையை ஒலிபரப்ப அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங் தினர் அவர்கள் இந்த யோசனையை அகில இந்திய ரேடியோவிற்கு எழுதி அனுப்பலாம். அவர்கள் இதைக் கட்டாயம் கவனிப்பர்கள் என்று நினைக்கிறேன்.

SRI A. A. RASHEED : Sir, have the Government received any complaint from the schools regarding the Broadcast?

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not have any information here, Sir.

District Headquarters Hospitals

* 493 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of beds provided for (i) men, (ii) women and (iii) children, in each of the district headquarters hospitals during the years 1955, 1956 and 1957; and

(*b*) the number of (i) in-patients, (ii) out-patients treated therein during these years?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) A statement[a] is placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், நமது ராஜ்யத்திலே அதிகப்படியான ஜனத் தொகை கொண்டது சேலம் ஜில்லா. அத்துடன் மேஜையின் மேல் வைக்கப்பட்டிருக்கும் லிஸ்டில் சேலம் ஜில்லா ஆஸ்பத்திரிக்கு அதிகப்படியான நோயாளிகள் வருவதாகக் காட்டப்பட்டிருக்கிறது. குறைந்த நோயாளிகள் இருந்தும் தஞ்சை ஜில்லா ஆஸ்பத்திரியில் 766 பெட்டுகள் இருந்தும், அதில் பாதிஎண்ணிக்கைதான் சேலம் தலைமை ஆஸபத்திரியில் இருக்கக் காரணம் என்ன ?

MR. SPEAKER : இதற்கு மந்திரி அவர்கள் எப்படி பதிலளிப்பார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இரண்டு பக்கங்கள் பதில் கொடுத்திருக்கிறேன். இன்னும் விவரம் வேண்டுமானல் தனியாகக் கேள்வி கேட்டால் கொடுக்கிறேன்.

SRI P. G. MANICKAM : கோயமுத்தூர் ஜில்லா தலைமை ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. ஆனல் படுக்கைகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த சர்க்கார் முன் வருவார்களா ? 8-40 a.m.

THE HON. SRI M. A. MANICKAVELU : சாத்தியமான வகையில் ஆங்காங்கே படுக்கைகள் அதிகப்படுத்தப்பட்டுத் தான் வருகின்றன.

---

* Printed as Appendix I on page 485 infra.

[1st April 1958

SRI S. M. ANNAMALAI : இந்தப் படுக்கைகளில் மூட்டைபபூச்சிகள் அதிகமாக இருக்கின்றன. (சிரிப்பு). அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்குமா.

MR. SPEAKER : இதற்கு தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI T. T. DANIEL : From the paper placed before us, it is seen that in the Tirunelveli Headquarters Hospital and the Kanyakumari Headquarters Hospital, there are no provisions for beds for children. Will the Government be pleased to provide beds for children? Also in the Tirunelveli Hospital, there are provisions for only 10 beds for women and as that is very small as compared to the provision made in other hospitals in the State, will the Government increase the number of beds for women?

THE HON. SRI M. A. MANICKAVELU : About providing accommodation for children, that will be looked into. As regards increase in bed strength, that also will be considered when the report from the District Medical Officer concerned reaches the Government.

SRI N. MARUDACHALAM : கோவை சர்க்கார் ஆஸ்பத்திரியில் க்ஷயரோக நோயாளிகளுக்காக பக்கத்தில் கட்டடம் கட்டப்பட்டு, லைட் இன்னும் போடவில்லை. படுக்கைகளும் போடவில்லை. கட்டிடம் கட்டி 3 மாதம் ஆகிறது. எப்பொழுது படுக்கைகள் போடப்போகிறார்கள் ? எப்பொழுது நோயாளிகளுக்கு சிகிச்சை செய்வதாக உத்தேசம் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நியாயமாக இதற்குத் தனிக் கேள்வி தான் போட வேண்டும். கட்டிடம் கட்டியாய் விட்டது. விளக்குப் போடுகிற வேலை இனிமேல் நடக்கும்.

SRI M. K. SOMASUNDARAM : திருநெல்வேலி தலைமை ஆஸ்பத்திரியிலே 152 படுக்கைகள் இருக்கின்றன. பெண்களுக்கு 10 படுக்கைகள் இருக்கின்றன. அங்கே தங்கி சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 5,205. எல்லோரையும் படுக்கைகளிலே படுக்க வைத்திருக் கிறார்களா ? அல்லது வராண்டாவில் படுக்க வைத்திருக்கிறார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்பொழுது நம் ஆஸ்பத் திரிகளில் வராந்தாவில் படுக்கிற நிலைமையும் இருக்கிறது என்று தான் சொல்ல வேண்டும்.

SRI A. GOVINDASAMY : அரசாங்கம் கொடுத்திருக்கிற இந்த அறிக் கையில் தென் ஆற்காடு, செங்கல்பட்டு, நீலகிரி, ராமநாதபுரம், கன்னியா குமரி ஆகிய ஐந்து மாவட்டங்களில் மட்டும் மிகக்குறைந்த படுக்கைகள் போடப்பட்டிருக்கின்றன. மற்ற மாவட்டங்களில் இருக்கிற நிலைமைக்கு உயர்த்த அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதிலே செங்கல்பட்டு ஜில்லாவிலே உயர்த்தப்படும். ஏனென்றால் அங்கே புதிதாக பெரிய ஆஸ்பத்திரி கட்டப்போகிறார்கள். அதே மாதிரித் தான் தென் ஆற் காட்டிலும் என்று நினைக்கிறேன். ஒவ்வொரு இடத்திலும் கொஞ்சம் கொஞ்சமாக பணம் கிடைக்கும்போது அதிகப்படுத்திக் கொண்டு தான் வருகிறோம்.

SRI V. K. KOTHANDARAMAN : வட ஆற்காடு ஜில்லாவிலே வருடா வருடம் நோயாளிகள் அதிகரித்துக் கொண்டே வருகிறார்கள் என்று அறிக்கையிலிருந்து தெரிகிறது. இதற்குக் காரணம்...........

MR. SPEAKER : காரணம் சொல்லவேண்டுமென்றால், தனிக்கேள்வி போடவேண்டும்.

1st April 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not think that 264 is a small number. So, I do not think that there is anything wrong in the Markanam firka.

Harijan Christians

* 496 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether Harijan converts to Christianity are treated on a par with Harijan Hindus in the matter of educational concessions;

(*b*) whether any circular has been issued on behalf of the Director of Public Instruction in September 1957, insisting upon the production of conversion certificates as in Appendix 17-B, of the Madras Educational Rules by Harijan Christians;

(*c*) whether representations have been received from the Tamil Harijan Christian Association requesting cancellation of the said order and grant of concessions irrespective of the conversions having been recent or otherwise; and

(*d*) if so, the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*), (*c*) & (*d*) The entire question has been examined with reference to certain representations received by the Government and orders have been issued dispensing with the production of conversion certificates for the grant of fee concessions which are admissible to Harijans, to members of those communities converted to Christianity.

SRI A. V. P. ASAITHAMBI : புத்த மதத்திற்கு மதம் மாறிய ஹரிஜனங்களுக்கு இந்தச் சலுகை அளிக்கப்படுகிறதா ? அல்லது அளிக்கப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதுவரையிலும் அந்தப் பிரச்னை நம்முடைய ராஜ்யத்தில் எழவில்லை.

SRI T. T. DANIEL : Whereas the policy of the Government is to give educational concessions to Harijans because they are very, very backward, will the Government think of the desirability of extending these concessions also to all the Harijans whether they are Christians or Hindus by birth?

THE HON. SRI C. SUBRAMANIAM : That is what is being done now. The Harijan converts also are getting educational concessions.

SRI K. R. VISWANATHAN : இந்தச் சலுகைகளை கிரிஸ்தவர்களுக்கும் பிற்பட்ட மக்களுக்கும் நீடிக்க முடியுமா என்று கேட்கிறேன்?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஹரிஜனங்களுக்கு இந்தச் சலுகை கொடுப்பதற்கு காரணம் அவர்கள் கல்வித் துறையில் பிற்போக்காக இருப்பது மட்டும் அல்ல. சமுதாயத்திலும் அவர்கள் தொடப்படாதவர்களாக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தார்கள். கிரிஸ்தவ மதத்திற்கு